**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC.107 /2018**

**Deposition of P.W.10**

Name : திரு. ஹரிகிருஷ்ணன்
S/o, D/o, W/o :
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:24.09.2025**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது திருப்பூர் மாநகரம் போக்குவரத்து புலன் ஆய்வு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை வட்ட காவல் ஆய்வாராக பணியாற்றிய போது 26.03.2014ம் தேதி தக்கலை காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. பரத்லிங்கம் என்பவர் பதிவு செய்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவமான புங்கறை, நெல்லிக்குற்றிபாறை இசக்கிஅம்மன் கோவில் சென்று சாட்சிகள்T. பிரான்சிஸ், K.பிரான்சிஸ் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5. பின்னர் மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம்பதிவு செய்தேன். சாட்சிகள் ஸ்டாலின், சதிஷ், செந்தில்,

உதவி ஆய்வாளர் திரு. பரத்லிங்கம் ஆகியவர்கைள தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரியை 26.03.2014ம் தேதி 15.30 மணிக்கு செல்லங்கோணத்தில் வைத்து கைது செய்து சாட்சிகள் அனிஷ், ரதீஷ், ஆகியவர்கள் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரி ஸ்டாலின் பாக்கெட்டில் இருந்து பறித்து எடுத்து ரூ.200/- மற்றும் ஸ்டாலினை வெட்டுவதற்கு பயன்படுத்திய வெட்டுக்கத்தி ஆகியவற்றை ஆஜர் செய்வேன் என தெரிவித்தார். அதன் பேரில் 16.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஆஜர் செய்த ரூ.200/- மற்றும் வெட்டுக்கத்தியை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6. வெட்டுக்கத்தி சா.பொ.1. ரூ.200/- சா.பொ.2, படிவம் 95 அ.சா.ஆ.7. பின்னர் எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அத்தாட்சி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம்பதிவு செய்தேன். பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திருமதி.அமுதா அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிக்கு எதிராக குற்ற எண்.283/2010 வழக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திருமதி. நாககுமாரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கு விசாரணையை முடித்து 30.07.2014ல் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரியை நான் சாட்சிகள் அனிஷ் ரதீஷ் ஆகியவர்கள்

முன்னிலையில் கைது செய்தேன். மேற்படி சாட்சிகள் எதிரி கைது செய்ததை பார்க்கவில்லை என்று கூறியிருந்தால் அது சரியல்ல. மேற்படி சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தடையங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரியும், புகார்தாரரும் சம்பவ இடத்தில் இல்லை. எதிரியும், புகார்தரரரும் சம்பவ இடத்தில் வந்ததாக நாங்கள் பொய்யாக கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் சொன்னதுபோல் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சான்று பொருட்களை எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஜோடித்து எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்யும் போது என்ன ஆடை அணிந்திருந்தார் என்றால் 11 வருடங்கள் கடந்துவிட்டதால் ஞாபகமில்லை. வெட்டுக்கத்தியை எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்தார். வெட்டுக்கத்தியை எதிரி மறைத்து வைத்திருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு லேசான காயம் ஏற்பட்டுள்ளது என்றால் மருத்துவரிடம் தான் கேட்க வேண்டும். மருத்துவர் காயச்சான்றில் சிறிய காயம் என்று கூறியிருந்தால் சரிதான். காயம்பட்டவர் மருத்துவரிடம் தன்னை தெரியாத ஒரு நபர் அரிவாளால் தாக்கியதாக கூறியிருக்கிறார் என்றால் சரியல்ல. அரிவாளும், வெட்டுக்கத்தியும் வேறு வேறு என்றால் சரிதான். ஆனால் கன்னியாகுமரியில் அரிவாளையும். வெட்டுக்கத்தியையும் வெட்டுக்கத்தி என்று தான் சொல்வார்கள். மருத்துவரிடம் அரிவாள் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.நான் வெட்டுக்கத்தி கைப்பற்றியுள்ளேன் என்றால் சரிதான். ரத்தம்பட்ட துணிகளை நான் கைப்பற்றவில்லை. சம்பவம் நடக்காததால் சம்பவ இடத்தில் ரத்தமும்,

ரத்தம்பட்ட ஆடைகளும் இல்லை என்றால் சரியல்ல. வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் சரிதான். காயம்பட்டவருக்கு தையல்போடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எதிரி மீதுள்ள விரோதத்தில் பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சிகளை வழக்கில் போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.